[31st January 1972

Industrial Estate

* 71 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that a site purchased by the Government at Ranipet for establishing an industrial estate is lying unutilised;

(b) if so, the reasons therefor; and

(c) the price for which and the year in which the land in question was purchased?

தொழிற்பேட்டை

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ராணிப்பேட்டையில் தொழிற்பேட்டை ஒன்று நிறுவுவதற்காக அரசால் வாங்கப்பட்ட மனை பயன்படுத்தப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அந்த நிலம் என்ன விலைக்கு வாங்கப்பட்டது? எந்த ஆண்டில் வாங்கப்பட்டது?

THE HON. THIRU S. MADHAVAN: (a) and (b) A total extent of 711.52 acres was acquired for the establishment of a developed plots estate at Ranipet. There has been no adequate demand for the plots in this area. As the selling price of plots will be high if developmental works are taken up, and as it will be difficult to sell developed plots, it has been decided to keep the land, as it is for sale to entrepreneurs as and when they approach for allotment.

(c) The lands were purchased at a total cost of Rs. 8,21,642 during the period from May 1965 to December 1968.

THIRU G. SWAMINATHAN: Sir, the land was purchased at a total cost of about Rs. 8 lakhs during December 1965. I understand that the plot has been kept vacant for over a period of 6 years and I am also informed that previous to purchase by the Government there was cultivation of groundnut, maize in that place. May I know why the Government have kept this land, which was purchased for about 8 lakhs of rupees, vacant for a period of 6 years and why the land has been kept in such a nature?

THE HON. THIRU S. MADHAVAN: Sir, the land was acquired in 1963 thinking that there would be entrepreneurs coming forward for allotment of sites. But no entrepreneurs came forward. That is why the land is kept vacant.

THIRU G. SWAMINATHAN: Sir, the Hon. Minister stated that it was presumed that enterpreneurs would come forward. But as expected by the Government no entrepreneurs came forward. Why have the Government kept this land vacant for eight years? Government also have lost interest on the investment.

31st January 1972]

THE HON. THIRU S. MADHAVAN: That is why this Government, after taking over charge, have asked the Collector, and the Director of Industries to call for entrepreneurs and to encourage the people to come forward for these developed plots.

THIRU G. SWAMINATHAN: May I know whether the Government would prescribe a time-limit of 6 months or one year so that if no entrepreneurs come forward within this period, they can sell out plots?

THE HON. THIRU S. MADHAVAN: Sir, it is not possible to fix any time-limit.

Tree-top Hotels at Mudumalai

* 72 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to lease out lands in Mudumalai Sanctuary to private parties to run "tree-top" Hotels; and

(*b*) if so, the details thereof?

"மர உச்சி" ஓட்டல்கள், முதுமலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "மர உச்சி" ஓட்டல்கள் நடத்துவதற்கு, முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் தனியாருக்கு நிலங்கள் குத்தகை விடுவதற்கு செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) ஆம்.

(இ) "மர உச்சி" ஓட்டல்கள் கட்டுதல் என்னும் பொருள் பற்றி 24-5-1967 அன்று ஊட்டியில் நடைபெற்ற தமிழ் நாடு வன விலங்கு வாரியத்தின் பதினொன்றாவது கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தமிழ் நாடு வன ஆலோசனை வாரியத்தின் அலுவலர் அல்லாத உறுப்பினர்களில் ஒருவரான திரு. எம். ஏ. பார்த்தசாரதி என்பவர், முதுமலை வன விலங்கு உய்விடத்தில் இத்தகைய ஓட்டல் ஒன்று கட்டுவதற்கு முன்வந்ததுடன், அரசுக்கு அத்திட்டத்தின் நகலையும் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார். அவருக்கு, முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் இத்தகைய ஓட்டல் ஒன்று கட்டுவதற்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 100 வீதம் 100 ஹெக்டேர் நிலத்தை முதலில் 25 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கலாம் என்ற வனத்துறைத் தலைவரின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சென்ற ஜூன் மாதத்தில் முதுமலை வனவிலங்கு உய்விடத்திற்குச் சென்று பார்த்தபோது அங்கே மற்றொரு "வ்யூ டவர்", உயரே இருந்து பார்க்கிற கோபுரம் ஒன்று கட்டப்போவதாகச் சொன்னார்கள். அதுமாதிரி இன்னொரு கோபுரம் கட்டும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: தலைவர் அவர்களே, இருக்கிறது.